**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**
**முன்னிலை : செல்வி.S.ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு.

**2026-ம் வருடம் மார்ச் திங்கள், 17-ம் நாள், செவ்வாய்க்கிழமை**

**ஆண்டு பட்டியல் வழக்கு எண்.266/2023**
**CNR NO: TNTJ160007932023**

அரசுக்காக: உதவி ஆய்வாளர்,
மருவூர் காவல் நிலையம்,
குற்ற எண்.24/2023 ...குற்றமுறையிடுபவர்

//எதிராக//

1. பிரபு, த/பெ. துளசிஅய்யா.
2. பிரகாஷ், த.பெ. துளசிஅய்யா
3 துளசிஅய்யா, த/பெ. கலியபெருமாள்,
எதிரிகளின் வசிப்பிடம்வெள்ளாளர் தெரு,
சாத்தனூர், திருவையாறு தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம். ...எதிரிகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | | |
| **S.No.** | **CASE SUMMARY** | | | | | |
| (i) | **The Period of remand of the accused** | : | **Name of the Accused** | | **Date of Remand** | **Release on** |
| | | | 1. | Prabhu | 03.06.2023 | 07.06.2023 |
| | | | 2. | Prakash | Anticipatory Bail granted in Cr.M.P.No. 3578/2023 Dt. 16.06.2023 by the Honourable Principal District and Sessions Court, Thanjavur | |
| | | | 2. | Thulasiayya | | |
| (ii) | **The date of filing of the complaint/final report in the Court** | : | **Filing of Complaint** | | **Filing of Final Report** | |
| | | | 03.06.2023 | | 14.08.2023 | |
| (iii) | **The date of committal of** | : | | | | |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.17 19:53:29 +0530

<table>
<tr><td></td><td>the case to the Court of Session</td><td></td><td colspan="4">NIL</td></tr>
<tr><td>(iv)</td><td>The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe</td><td>:</td><td colspan="4">09.09.2025</td></tr>
<tr><td rowspan="3">(v)</td><td rowspan="3">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code</td><td rowspan="3">:</td><td colspan="2">Crl.M.P.No.</td><td>Date of Filing</td><td>Result</td></tr>
<tr><td colspan="2">Crl.MP.No.638/2026 U/s. 320 Cr.P.C (Petition omitted to be registered in Crl.M.P. Register. As per office order No: 27/2026 Dated: 17.03.2026, Crl.M.P. No given on 17.03.2026.)</td><td>11.11.2025</td><td>Dismissed</td></tr>
<tr><td colspan="2">Crl.MP.No.525/2026 U/s. 311 Cr.P.C</td><td>11.03.2026</td><td>Allowed</td></tr>
<tr><td rowspan="3">(vi)</td><td rowspan="3">Date of examination in-chief and cross-examination of a witness</td><td rowspan="3">:</td><td colspan="2">Name of the Examination</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW1</td><td>Sakthivel</td><td>11.11.2025</td><td>11.11.2025</td></tr>
<tr><td>PW2</td><td>Shanthi</td><td>11.11.2025</td><td>11.11.2025</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>PW3</td><td>Muruganantham</td><td>11.11.2025</td><td>11.11.2025</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>PW4</td><td>Suresh</td><td>11.11.2025</td><td>11.11.2025</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>PW5</td><td>Murugadoss (IO)</td><td>11.03.2026</td><td>11.03.2026</td></tr>
<tr><td>(vii)</td><td>Date of examination of the accused U/Sec 313 of the Code</td><td>:</td><td colspan="4">17.03.2026</td></tr>
<tr><td>(viii)</td><td>Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and</td><td>:</td><td colspan="4">Not Applicable.</td></tr>
<tr><td rowspan="2">(ix)</td><td rowspan="2">Grant of stay by superior Courts and the results thereof</td><td rowspan="2">:</td><td colspan="2">Sessions Court CMP Numbers</td><td>High Court No and Date of Stay</td><td>Result</td></tr>
<tr><td colspan="4">NIL</td></tr>
</table>

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.17 19:53:40 +0530

Date:17.03.2026 JM Court, Thiruvaiyaru.

| | | |
|---|---|---|
| 1–வது குற்றச்சாட்டு | : | 2, 3 எதிரிகள் புகார்தாரரை பொது இடத்தில் புகார்தாரருக்கு அருவருப்பு ஏற்படும் வகையில் அசிங்கமான வார்த்தைகளால் திட்டிய செயலுக்காக 2, 3 எதிரிகள் மீது இதச.பிரிவு.294(b)–ன் கீழ் |
| 2–வது குற்றச்சாட்டு | : | 2, 3 எதிரிகள் புகார்தாரரை கையால் அடித்து சொற்ப காயம் ஏற்படுத்திய செயலுக்காக 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 323–ன் கீழ் |
| 3–வது குற்றச்சாட்டு | | 1–ஆம் எதிரி புகார்தாரரை அரை செங்கல்லாள் அடித்து புகார்தாரருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்திய செயலுக்காக இதச. பிரிவு.326–ன் கீழ் |
| 4–வது குற்றச்சாட்டு | | 1–வது எதிரி புகார்தாரருக்கு கொலை மிரட்டல் விடுத்த செயலுக்காக இதச. பிரிவு.506(i)–ன் கீழ் |
| எதிரிகளின் பதில் | : | பொய் வழக்கு. |
| நீதிபதியின் தீர்மானம் | : | குற்றவாளிகள் இல்லை என முடிவு. |
| உத்தரவு (அ) தண்டணை | : | 1. 1–வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 326, 506(i)–ன் கீழும், 2, 3–வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323–ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று, எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>2. இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் ரத்து செய்யப்படுகிறது.<br>3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 14.08.2023–ம் தேதி ஆண்டுபட்டிகை வழக்கு எண்.266/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 17.03.2026–ம் தேதி இறுதி

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.17 19:53:49 +0530

விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.A. பாஸ்கர், B.A.,B.L.,** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்றுவரை என் ஆய்வில் வைத்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

எதிரிகள், இதச பிரிவுகள் 294(b), 326, 323, 506(i)-ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக மருவூர் காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**1. கு.வி.மு.ச.பிரிவு.173-ன் கீழ் தாக்கலான குற்ற இறுதி அறிக்கையின் படி வழக்கின் சுருக்கம்:-**

கடந்த 01.06.2023-ஆம் தேதி 22.30 மணிக்கு புகார்தாரருக்கும், அவரது மனைவிக்கும் வாய்தகராறு நடந்து கொண்டிருந்தபோது, எதிரிகள் மூவரும் தங்களை பேசுவதாக நினைத்து, 1-வது எதிரி அரை செங்கல்லால் புகார்தாரரின் நெற்றியின் இடது பக்கம், இடது கண், மூக்கு வாய் பகுதியில் அடித்து, கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2, 3 எதிரிகள் புகார்தாரரை காமகுரோதமான வார்த்தைகளால் திட்டி கையால் உடம்பில் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், 1-வது எதிரி கொலை மிரட்டல் விடுத்தும் உள்ளனர். மேற்படி செய்கையின் மூலம் 1-வது எதிரி இ.த.ச. பிரிவுகள் 326, 506(1)-ன் கீழும், 2-வது எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 323-ன்கீழும் குற்றம் இழைத்துள்ளதாக மருவூர் காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு.204-ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், கு.வி.மு.ச.பிரிவு.207-ன் கீழ் வழக்காவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பின் வாதங்களை கேட்டும், 1-வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 326, 506(1)-ன் கீழும், 2, 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323-ன்கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, குற்றச்சாட்டுகளை எதிரிகளுக்கு எடுத்து கூறி விளக்கி வினவியபோது, எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தனர். எனவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.17 19:53:57 +0530

**3.** அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அரசுதரப்பில் **அ.சா.1 முதல் 5** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**4. அரசுத்தரப்பு சாட்சியங்களின் படி வழக்கின் சுருக்கம்:-**

புகார்தாரர் சாத்தனூரில் வசித்து வருகிறார். சுமார் 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் புககார்தாரரை யாரோ கல் வீசி தாக்கியுள்ளனர். எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் சொத்து பிரச்சனை இருந்ததால் சந்தேகத்தின்பேரில் போலிசாரிடம் சொல்லி கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். கடந்த 02.02.2023-ம் தேதி காலை 09.30 மணிக்கு தஞ்சாவூர் TMCH மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை உதவி ஆய்வாளர் பெற்று, அங்கு உள்நோயளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.2-புகார் வாக்குமூலத்தை பெற்று, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-3 பதிவு செய்து, சம்பவம் இடம் சென்று, சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர்-அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் - அ.சா.ஆ.5 தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று, காலை 11.30 மணிக்கு சாத்தனூர் நடுத்தெரு பிள்ளையார் கோவில் அருகே 1-வது எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், 2, 3 எதிரிகள் நீதிமன்ற பிணையில் சென்றதை தெரிந்துகொண்டு, காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களை விசாரித்து, அவர்களிடம் விபத்துப் பதிவேடுகள் மற்றும் மெடிக்கோ லீகோ பார்ம் முறையே அ.சா.ஆ.6 முதல் 8 பெற்று, இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து 03.07.2023-ஆம் தேதி எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்ததாக புலன் விசாரணை அதிகாரி தரப்பில் அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார்.

**5.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து, கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ)-ன் கீழ் எதிரிகளிடம் வினவியபோது, எதிரிகள் அவற்றை பொய்சாட்சி என்றும், பொய்வழக்கு என்றும் பதில் கூறினார். எதிகளின் பதில் பதிவு செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.17 19:54:02 +0530

**6. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

(i) 1–வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 326, 506(1)–ன் கீழும், 2, 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323–ன்கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

(ii) எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன? என்பதேயாகும்.

**7. தீர்வு:–**

கடந்த 01.06.2023–ஆம் தேதி 22.30 மணிக்கு புகார்தாரரை 1–வது எதிரி அரை செங்கல்லாள் புகார்தாரரின் நெற்றியின் இடது பக்கம், இடது கண், மூக்கு வாய் பகுதியில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், கொலை மிரட்டல் விடுத்தும், 2, 3 எதிரிகள் புகார்தாரரை காமகுரோதமான வார்த்தைகளால் திட்டி கையால் உடம்பில் அடித்து சொற்ப காயம் ஏற்படுத்தியும், இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 326, 506(1)–ன் கீழ் குற்றம் இழைத்ததாக அரசு தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்தால் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

கடந்த 01.06.2023–ஆம் தேதி 22.30 மணிக்கு வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டு, 03.06.2023–ஆம் தேதி புகார்தாரரால் அ.சா.ஆ.2–புகார் அளிக்கப்பட்டு, அன்றையதினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, மாலை 03.00 மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை 03.07.2023–ம் தேதி முடிவுற்று, குற்ற இறுதி அறிக்கை 14.08.2023 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1–ஆகவும், கண்ணுற்ற சாட்சிகளாக–அ.சா.2 முதல் 4 சாட்சிகளும், புலன் விசாரணை செய்த அதிகாரி தரப்பில் உதவி ஆய்வாளர்–அ.சா.5–ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். ஏனைய பட்டியல் சாட்சிகள் அரசு தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை.

புகார்தாரர்–அ.சா.1–ம், அவரது மனைவி அ.சா.2–ம் தங்கள் சாட்சியத்தில், யாரோ அ.சா.1–ன்மீது கல்லை வீசி தாக்கிவிட்டார்கள் என்றும், அங்கு ஆஜர் எதிரிகள் இருந்தார்களா என்று தங்களுக்குத் தெரியாது என்றும், தங்களுக்குள் முன்விரோதம் இருந்ததால் போலிசாரிடம் விபரம் சொன்னதாகவும், புகாரில் என்ன எழுதியிருந்தது என்று அ.சா.1 படித்துப்பார்க்கவில்லை என்றும், பிறழ்சாட்சிகளாக மாறி அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். மற்ற கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 தங்களது சாட்சியத்தில், வழக்கு

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.17 19:54:07 +0530

பற்றி தங்களுக்கு தெரியாது என்று பிறழ்சாட்சிகளாக மாறி அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளனர். எனவே, எதிரிகள் தான் அ.சா.1–ஐ தாக்கி அவர்களுக்கு காயத்தை ஏற்படுத்தியதாகவோ, தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் அறிய முடியவில்லை.

புலன் விசாரணை அதிகாரி தரப்பில் சாட்சியமளித்துள்ள அ.சா.5–உதவி ஆய்வாளர், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி புகார்தாரரிடமிருந்து புகாரை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். இருப்பினும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரிகள் மீதான குற்றச் சம்பவம் அரசு தரப்பில் நிரூபித்ததாக எடுத்துக் கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. புகார்தாரர் மற்றும் எதிரி தரப்பில் சமரசம் செய்து கொண்டதாக கு.வி.மு.ச பிரிவு 320–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு சமரசம் செய்யக்கூடிய குற்றம் இல்லை என்பதால் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை பொறுத்தவரையில், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, மேற்கண்ட சந்தேகங்களின் பலனை எதிரிகளுக்கு அளித்து, 1–வது எதிரி இ.த.ச. பிரிவுகள் 326, 506(1)–ன் கீழும், 2, 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323–ன்கீழும் குற்றவாளிகள் அல்ல என்று கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரி விடுதலை செய்யப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. புகார்தாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்று மருத்துவ ஆவணங்களின் மூலம் தெரியவந்தாலும், வழக்கு சம்பவத்தில் மேற்படி காயம் ஏற்பட்டதாக நிரூபிக்கப்படாததால் புகார்தாரருக்கான இழப்பீடு பொறுத்து உத்தரவு எதுவும் பிறப்பிக்க வேண்டியதில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>8. முடிவாக,</u>

**1. 1–வது எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 326, 506(1)–ன் கீழான குற்றச்சாட்டும், 2, 3 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 294(b), 323–ன் கீழான குற்றச்சாட்டும், அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று, எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.17 19:54:12 +0530

Date:17.03.2026 JM Court, Thiruvaiyaru.

**2. இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் ரத்து செய்யப்படுகிறது.**

**3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026**–ம் ஆண்டு **மார்ச்** மாதம் **17**–ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.17 19:54:20 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள் :–</u>**

| | |
|---|---|
| அ.சா1 | சக்திவேல் (புகார்தாரர்) |
| அ.சா.2 | சாந்தி |
| அ.சா.3 | முருகானந்தம் |
| அ.சா.4 | சுரேஷ் |
| அ.சா.5 | முருகதாஸ் (புலன் விசாரணை அதிகாரி) |

**<u>அரசுதரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 03.06.2023 | புகார் மனுவில் உள்ள கையொப்பம் – அசல் |
| அ.சா.ஆ.2 | 03.06.2023 | புகார் மனு – அசல் |
| அ.சா.ஆ.3 | 03.06.2023 | முதல் தகவல் அறிக்கை – அசல் |
| அ.சா.ஆ.4 | 03.06.2023 | பார்வை மகஜர் – அசல் |
| அ.சா.ஆ.5 | 03.06.2023 | மாதிரி வரைபடம் –அசல் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6 | 03.06.2023 | அ.சா.1–ன் விபத்துப்பதிவேடு –அசல் |
| அ.சா.ஆ.7 | 03.06.2023 | அ.சா.1–ன் காயச்சான்று –அசல் |
| அ.சா.ஆ.8 | 02.06.2023 | அ.சா.1–ன் மெடிக்கல் லீகல் பார்ம் –அசல் |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருட்கள்:–** இல்லை.

**குறிப்பு:–**

1. எந்த சாட்சியமும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.17 19:54:27 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு